ஆங்கில மருந்து வகைகள்,
ஆயுள் வேத மருந்து வகைகள்,
கோவில் அபிஷேகச் சாமான்கள்.
மற்றும்
நாட்கருமங்களுக்குரிய சாமான்கள்

தினசரி மாலை வைத்திய சேவை எல்லாவற்றிற்கும்

சித்தி மெடிக்கல் சென்ரர்
புகையிரத நிலைய வீதி,
மல்லாகம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

கால் நடை வைத்திய நிலையம் (தனியார்)

கால்நடை வைத்திய ஆலோசனை,
செயற்கைமுறைச் சினைப்படுத்தல்,
கோழிகளுக்கு றனிக்கட்,
அம்மை தடுப்பூசி ஏற்றல்
ஆகிய சேவைகளுக்கு

சித்தி மெடிக்கல் சென்ரர்
புகையிரத நிலைய வீதி,
மல்லாகம்.

கடர் 5: பிரமோதூத ஆனி 22 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஜ்தா பிறை 12 (06 - 07 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 133

## பொது இடத்தில் பதுங்குகுழி; மாணவிகள் முன்மாதிரி!

யாழ்ப்பாணம், ஜூலை 6

பொதுமக்களுக்கு உதவி அவர்களைப் பாதுகாக்க வேண்டிய காலம் இது. அதற்காகப் பல வகைகளில் தொண்டுபுரியலாம்.

அந்த வகையில் அரியாலைப் பகுதியிலுள்ள யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவிகள் ஒரு முன்மாதிரி காட்டி உள்ளனர். தாங்கள் ஆண்களுக்குச் சளைத்தவர்கள் அல்லர் என்பதைச் செயலில் காட்டி பொது மக்களின் பாராட்டைப் பெற்றுள்ளனர்.

அந்த மாணவிகள் பொது இடங்களில் பதுங்குகுழிகளை அமைக்கும் ஓர் உன்னத பணியில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். அதன் முதற்கட்டமாக நேற்று அவர்கள் புங்கங்குளம் ரயில் நிலையத்துக்கு அருகில் பதுங்குகுழி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

மாணவிகளின் உயர்ந்த முயற்சியைக் கண்ட அப்பகுதி மக்களும், தனியார் கல்வி நிலையம் ஒன்றின் மாணவர்களும் அவர்களுக்கு தம்மாலான உதவிகளைச் செய்தனர். (ஒ)

# யாழ். உணவு நிலை குறித்து முரணான புள்ளிவிவரங்கள்

## பஞ்ச நிலை உருவாகிறதா?

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ்ப்பாண மாவட்டத்தின் உணவுப் பொருள் கையிருப்புக் குறித்து முரண்பாடான தகவல்களும், புள்ளி விவரங்களும் தெரிவிக்கப்படுகின்றன.

இதனால் எது சரி, எது பிழை என்று தெரியாத நிலையில், இன்னும் ஒரு சில தினங்களில் பஞ்ச நிலை உருவாகி விடுமோ என்ற அச்சம் மக்களிடம் ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் உணவுப் பொருள்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதாக, நடவடிக்கை எடுப்பதாகக் கூறிவந்த போதிலும், கடந்த இருபது நாட்களுக்கு மேலாக ஒரு சிறு தானியம் தானும் இங்கு வந்து சேரவில்லை.

பாதுகாப்புத் துணைஅமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினா, தாம் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து—

யுத்தம் ஆரம்பமான சமயத்தில் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் குறைந்தது இரண்டு மாதங்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் கையிருப்பில் இருந்தது —என்று கூறினார்.

அத்தியாவசிய சேவைகள் நாயகம் திரு. சரித்த ரத்வத்தை வடக்கு மாகாண உணவு நிலை குறித்து நேற்று முன்தினம் (புதன்கிழமை) தகவல் வெளியீடுகையில்—

வடக்கு மாகாணத்தில் உள்ள உணவுக் களஞ்சியங்களில் மூன்று வாரங்களுக்குப் போதுமான உணவுப்பொருள்கள் கையிருப்பில் உள்ளன —

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பலாலி, காங்கேசனில் நேற்றும் மோதல்கள்

காங்கேசன்துறை, ஜூலை 6

பலாலி, காங்கேசன்துறை முகாம்களைச் சேர்ந்த இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்றும் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன.

பலாலியில் இராணுவத்தினர் வெளியேறும் முயற்சிக்கு உதவியாக ஹெலிக்கொப்டர் மேலே வட்டமிட்டவாறு ஷெல் தாக்குதலையும், சரமாரியான வேட்டுக்களையும் தீர்த்தது.

பதிலாக புலிகளும் கடும் எதிர்த் தாக்குதலை நடத்தினர். அதை அடுத்து படையினர் முகாம் திரும்பினர்.

இதனிடையில் காங்கேசன் திஸ்ஸ விகாரையில் இருந்தும் படையினர் வெளியேற முற்பட்டனர் அங்கும் புலிகள் கடும் தாக்குதலை நடத்தி.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இடம் பெயர்ந்தோருக்கான உதவி அதிகரிக்கப்படும்

### யாழ். அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ். மாவட்டத்தில்இடம் பெயர்ந்தோருக்கான நிவாரண உதவித் தொகை அதிகரிக்கப்படஇருக்கிறது.

முதல்வாரம் வழங்கப்பட்ட நிவாரண உதவி 55 ரூபாவில் இருந்து 200 ரூபா வரை குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கைக்கு ஏற்றபடி வழங்கப்பட்டது.

இரண்டாம்வார நிவாரண உதவி முதல் வாரத்துக்கு வழங்கப்பட்ட தொகையிலும் பார்க்கக் கூடுதலாக வழங்கப்பட இருப்பதாக அரச அதிபர் தெரிவித்தார்.

அதேவேளை முதலாம் வாரம் நிவாரணம் வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்களை உடன் அனுப்புமாறு அரச அதிபர் சகல உதவி அரசாங்க அதிபர்களையும்பணித்துள்ளார். [ஒ-3]

## அரச ஊழியருக்கு சம்பளம் வழங்க முடியாத நிலை!

யாழ்ப்பாணம், ஜூலை 6

மத்திய. மாகாண அரசுகளிடம் இருந்து நிதி வந்து சேராததால் பல திணைக்கள ஊழியர்களுக்கு கடந்த மாதச் சம்பளம் வழங்க முடியாதுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

மாகாண கல்வி அமைச்சில் இருந்து பணம் வராததால் யாழ்- மாவட்டத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் முழுச்சம்பளமும் வழங்க முடியாது ஆயிரம் ரூபா முற்பணம் வழங்கப்பட்டது. அவர்களும் வங்கியில் பணம் இல்லாததால்காசோலையைக் காசாக்க முடியாது கஷ்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுப நேரம்

06 - 7 - 90

வெள்ளிக்கிழமை ஆனி 22

சுபநேரம்!

05-58— 07-28

இராகுகாலம்

10-28—11-58

## திருமலை நகருக்குள் செல்ல தமிழருக்கு அனுமதி அட்டை!

யாழ்ப்பாணம், ஜூலை 6

திருகோணமலை நகரில் உள்ள தமிழ் மக்களுக்கு ''அனுமதி அட்டை'' வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலை நகரில் கடந்த வாரத்தில் இருந்து ஓரளவு இயல்பு நிலை ஏற்பட்டுள்ளது.

நகரில் உள்ளவர்களுக்கு விசேட அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அந்த அட்டைகளை வைத்திருப்பவர்கள் அகதி முகாமில் இருந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

நகருக்கு வெளியே செல்ல விரும்பும் தமிழர்கள் சரியான காரணத்தை காட்டி இரா

[4 ஆம் பக்கம் பார்க்க]

## நினைவுக் கூட்டம் நடந்த இடத்திற்குச் சமீபமாக ஷெல்!

யாழ்ப்பாணம், ஜூலை 6

சரும்புலி மில்லரின் நினைவுக் கூட்டம் நடந்த இடத்திற்கு மிகச் சமீபமாக பல ஷெல்கள் விழுந்து வெடித்ததால் நேற்று நெல்லியடிப் பகுதியில் பதற்றம் நிலவியது.

நேற்று மாலை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் கரும்புலி மில்லரின் நினைவுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டம் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டிருந்தது. கூட்டத்திற்காக ஏராளமான மக்கள் மைதானத்தில் திரண்டிருந்தனர்.

அவ்வேளை சுமார் 6-10 மணியளவில் பருத்தித்துறை கடற்பரப்பிலிருந்து நெல்லியடியை அண்டிய பகுதிகளை நோக்கி பீரங்கிப் படகில் இருந்து ஷெல்கள் ஏவப்பட்டன.

அவை கூட்டம் நடைபெற்ற இடத்திலிருந்து சுமார் ஆயிரம் யார் தூரத்தில் உள்ள அத்தாய் பகுதியில் விழுந்ததில் சிலர் காயமடைந்தனர். மேலும் சில ஷெல்கள் கலிகை, கிளவி

(4-ஆம் பக்கம் பார்க்க)

## கடல் பீரங்கித் தாக்குதலால் 50 ஆயிரம் மக்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

வடபகுதிக் கடற் பிரதேசத்திலிருந்து கரையோரப் பகுதிகளை நோக்கி கடற்படையினர் தொடர்ந்து நடத்தி வரும் பீரங்கி தாக்குதல்களினால் சுமார் 50 ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் பாதிப்புற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல்களினால் கடற் தொழிலாளர்கள் மற்றும் கடற்கரை ஓரங்களில் வாழ்பவர்கள் மட்டுமல்லாமல் கடற்கரைகளில் இருந்து சுமார் இரண்டு மூன்று மைல்களுக்கு அப்பால் வசிக்கும் மக்களும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டது.

கடற்படையினர் பீரங்கிப் படகுகளில் இருந்து நடத்தும் தாக்குதல்களினால் கடற்கரையிலிருந்து 2, 3 மைல் தூரத்திற்கு அப்பால் உள்ள வீடுகளும் சேதமடைவதாகக் கூறப்படுகிறது.

பெரும் சத்தத்துடன் இடம்பெறும் பீரங்கித் தாக்குதல்களினால் கடற்கரையோரப் பிரதேசங்களில் இருந்து அதிக எண்ணிக்கையான மக்கள் இடம் பெயர்ந்து வருகின்றனர். (உ)

## மன்னார் பகுதி மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் தடை!

### தள்ளாடி ராணுவத்தினர் குந்தகம்

மன்னார் பகுதிக்கான குடிதண்ணீர் விநியோகத்துக்குத் தள்ளாடி முகாம் இராணுவத்தினர் குந்தகம் விளைவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்துக்கான குடிதண்ணீர் முருங்கனில் இருந்து குழாய் மூலம் தள்ளாடி இராணுவ முகாம் பகுதியூடாகவே செல்கிறது.

மன்னாருக்குச் செல்லும்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



குழந்தைகள் எண்டு மனிதாபிமானம் இல்லாமல் பட்டினி போடுற உவையளுக்கு என்ன தண்டனை கிடைக்குமோ?...!

## பன்குளத்தில் கடும் மோதல்; சிப்பாய்கள் 14 பேர் உயிரிழப்பு

### பெருமளவு ஆயுதங்களும் மீட்கப்பட்டதாகத் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 6

திருகோணமலை மாவட்டம் பன்குளம் வீதியில் நேற்று நண்பகல் 11.15 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்றமோதலில் இராணுவத்தினர் தரப்பில் 14 பேர் பலியானதாகவும், பலர் படுகாயமுற்றதாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலில் பெருமளவு ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

- ★ ஏ. கே - எல். எம். ஜி -1 (அதற்கான மகஸீன்-1)
- ★ ரி - 81 - 3
- ★ ரி - 56 - 2 ரகத்தில் -5
- ★ ரி - 56 - 1 ரகத்தில் -4
- ★ ஜே. ஆர். கிரனேட் -3
- ★ நடுத்தர ரவைகள் (I.M) - ஆயிரத்து 100
- ★ ரி என். ரி. கிரனேட் -1
- ★ ஏ. கே. மகஸீன் - 36
- ★ தொலைத் தொடர்பு சாதனம் - 1

-ஆகிய ஆயுதங்களே கைப்பற்றப்பட்டன என்று விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இந்த மோதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் தரப்பில் கப்டன் திலகன் என்ற போராளி வீரமரணமடைந்தார். (உ)

## நெடுந்தீவு வாழ் மக்கள் பட்டினியால் வாடும் நிலை!

குருநகர், ஜூலை 6

நெடுந்தீவு மக்கள் உணவுப் பொருள்கள் இன்றி பட்டினியால் வாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

படகுச் சேவை நடத்துவதில் ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் மற்றும் படையினரின் கடும் சோதனை நடவடிக்கைகள் காரணமாக உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல தடங்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் இங்குள்ள ஆயிரத்து 800 குடும்பங்கள் உணவுப் பொருள்கள் இல்லாது பெரும் அல்லலுறுவதாக நெடுந்தீவு பங்குத் தந்தை வண. எம். எம். வி. அமிர்தகுமார் அடிகள் யாழ் மனித முன்னேற்ற நடு நிலையத்தில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் வங்கிக் கிளைகள் திங்கள் முதல் இயங்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ். நகர மக்கள் வங்கிக் கிளைகள் திங்கட்கிழமை முதல் மீண்டும் இயங்கவுள்ளன.

திங்கட்கிழமை காலை 9 மணியிலிருந்து 10 மணிவரை சுமார் ஒருமணித்தியாலத்துக்கு வாடிக்கையாளர்களுக்காக வங்கிகள் திறந்திருக்கும்.

தற்போதைய நிலையில் பொதுமக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு பணக் கொடுக்கல் வாங்கல் மட்டுமே நடைபெறுமென மக்கள் வங்கியின் பிரதேச முகாமையாளர் உதயனுக்குத் தெரிவித்துள்ளார்.

நவீனசந்தை, பிரதான வீதி, ஸ்ரான்லிவீதி ஆகிய மக்கள் வங்கிக் கிளைகளில் கணக்குவைத்துள்ளவாடிக்கையாளர் ஸ்ரான்லிவீதி மக்கள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பால்மா இன்றி பசியால் வாடும் 85,000 பச்சிளம் குழந்தைகள்!

### வடக்கிலிருந்து "கெயருக்கு" அவசர கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 6

வடபகுதியில் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 85 ஆயிரம் குழந்தைகள் பால்மா உணவின்றி பசியால் வாடுகின்றனர். இந்தக் குழந்தைகளுக்கு உடனடியாக பால்மா வகைகளை அனுப்பி உதவ வேண்டும்.

இப்படியான அவசர கோரிக்கை ஒன்றை ''கெயர் இன்ரநஷனல்'' அமைப்புக்கு அதன் யாழ். கிளை விடுத்துள்ளது.

வானொலிச் செய்தி மூலம் பிரஸ்தாப அமைப்பு விடுத்த அவசர கோரிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ். மாவட்டத்தில் 5வயதுக்குட்பட்ட 35 ஆயிரம்சிறுவர்களும், ஒரு வயதுக்குட்பட்ட 5 ஆயிரம் குழந்தைகளும்-

மன்னார் மாவட்டத்தில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கதிரவெளிப் பகுதியிலும் பொம்மர் குண்டு வீச்சு!

### 12 வயதுச் சிறுவன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

மட்டக்களப்பு மாவட்டம் கதிரவெளியில் நேற்று முன்தினம் போர் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

இந்தத் தாக்குதலில் கருணானந்தன் என்ற 12 வயதுச் சிறுவன் உயிரிழந்தான்.

கந்தவனம் (வயது 60) என்ற வயோதிபர், சி. நிர்மலாதேவி (வயது 6) என்ற சிறுமி உட்பட பலர் இந்தத் தாக்குதலில் காயமுற்றனர்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையில் 50 வீதமான வீடுகள் பெற்றோல் ஊற்றி எரிக்கப்பட்டன

## அங்கிருந்து வந்த பிரமுகர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை6 திருகோணமலை நகரில் உள்ள தமிழருக்குச் சொந்தமான 50 வீதமான வீடுகள் பெற்றோல் ஊற்றி எரிக்கப்பட்டுவிட்டன.

கடந்த 13ஆம் திகதிக்குப் பின்னர் திருகோணமலை நகரில்இருந்துமக்கள் வெளியேறியதை அடுத்து தமிழர்களின் வீடுகள் யாவும் சோதனையிடப்பட்டன.

அங்கு தங்கியிருந்த தமிழர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். சரியான ஆதாரங்களைக் காட்டியவர்கள் வீடுசெல்ல அனுமதிக்கப்பட்டனர். ஆதாரம் காட்டத் தவறியவர்கள் தடுத்துவைக்கப்பட்டனர்.

எரிக்கப்பட்ட வீடுகளில் அனேகமானவை மக்கள் வெளியேறிய வீடுகள்தான்.

இந்தத் தகவல்களை அங்கு உயர்பதவி வகிக்கும் ஒருவர் தெரிவித்தார்.

திருகோணமலை நகரில் வசித்த பிரஸ்தாப உயர் அதிகாரி, ஒருசில தினங்களுக்கு முன்னரே அங்கிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை நகரில் வைத்து அரச அதிகாரிகள், அரச ஊழியர்கள் எவரும் கொலை செய்யப்படவில்லை என்றும் அவர் சொன்னார்.

## மக்கள் கடை

அராலி, ஜூலை 06 கட்டுப்பாட்டு விலையில் அத்தியாவசிய பொருள்களை பங்கீட்டு அடிப்படையில் பொது மக்களுக்கு விநியோகம் செய்வதற்காக வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் மக்கள் கடை ஒன்றை வட்டுக்கோட்டை நவீன சந்தையில் ஆரம்பித்துள்ளது. (உ-12)

## சாவகச்சேரியில் 75 முகாம்கள்

சாவகச்சேரி, ஜூலை 06 சாவகச்சேரி ப் பகுதியில் 75க்கு மேற்பட்ட அகதி முகாம்கள் உள்ளன.

அதேசமயம் தென்மராட்சி அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் அகதிகளுக்கு உதவ சாவகச்சேரி, கொடிகாமம் சந்தைகளில் மரக்கறிவகைகளைச் சேகரித்து வருகிறது. (இ-31)

## களஞ்சியத்திலிருந்து அரிசி எடுக்கப்பட்டு விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை6 கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா உணவுக்களஞ்சியத்தில் இருந்து மூன்று லொறி அரிசி எடுக்கப்பட்டு வவுனியா தமிழ்ப் பிரிவு ப. நோ கூ. சங்கத்துக்கும், பம்பைமடு ப. நோ. கூ. சங்கத்துக்கும் வழங்கப்பட்டது.

அத்தியாவசிய சேவைகள் நாயகத்துடன் வவுனியா அரச அதிபர் நடத்திய பேச்சுக்களை அடுத்து களஞ்சியத்தில் இருந்து உணவுப் பொருள்களை எடுக்க இராணுவத்தினர் அனுமதி வழங்கியிருந்தனர்.

இதைத்தொடர்ந்து வெள்ளி, சனி, இருநாட்களும் களஞ்சியத்தில் இருந்து அரிசி எடுக்கப்பட்டது. (இ-3)

## உடற்பயிற்சி கல்வி கட்டாய பாடம்

கொழும்பு, ஜூலை 6 பட்டப்படிப்புக்கும் உடற்பயிற்சிக் கல்வியை ஒரு பாடமாகச் சேர்த்துக் கொள்ளும் சாத்தியக் கூறுகள் பற்றி ஆராய்வதற்கு கல்வி, உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழுவுடன் பேச்சுக்களை நடத்த முடிவு செய்திருக்கிறார்.

அடுத்த ஆண்டு தொடக்கம் ஜீ. சி. ஈ. உயர்தரம் ஆகிய வகுப்புக்களுக்கான பாடவிதானத்தில் உடற்பயிற்சிக் கல்வியும் ஒரு பாடமாகச் சேர்த்துக் கொள்ளப்படும். (இ - எ)

## ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பம்

கொழும்பு, ஜூலை 06 மகாணத்திற்குள்ளும் மாகாணங்களுக்கு இடையேயும் இடமாற்றம் பெற விரும்பும் ஆசிரியர்களிடம் இருந்து கல்விச்சேவைகள் ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பங்கள் இம்மாத முடிவுக்குள் கல்விப்பணிப்பாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்று ஆணைக்குழுத் தலைவர் ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித்தார். (இ-எ)

## பொம்மர் வட்டமிட பதற்றம்

சாவகச்சேரி, ஜூலை6 செவ்வாய்க்கிழமை காலை சாவகச்சேரிச் சந்தைக்கு மேலாக ஹெலியும், பொம்மர்களும் பறந்தன. சந்தை அல்லோலகல்லோலப்பட்டது பொருள்கள் விற்கவும் வாங்கவும் வந்தவர்கள் பதுங்க இடம் தேடி அங்கும் இங்கும் ஓடினர். கடைகள் இழுத்து மூடப்பட்டன.

சுமார் ஒரு மணி நேரம் பதற்றநிலை தொடர்ந்தது. பின்பு சந்தை கூடிய போதிலும் மக்கள் இன்றி வெறிச்சோடிக் காணப்பட்டது. (இ-31)


## இடமாற்றம்

சன்லைற் றைக்கிளீனர்ஸ்

23, பஸ் நிலையம் முன்பாக,

யாழ்ப்பாணம்.

நமது வாடிக்கையாளர்களை

கிளை நிறுவனமான

சன்லைற் றைக்கிளீனர்ஸ்

கண்டிவீதி, (கச்சேரி அருகாமையில்)

யாழ். செஞ்சிலுவைச் சங்கம் முன்பாக

தொடர்பு கொள்ளுமாறு வேண்கின்றோம்.

(சி/4787)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### முத்து சின்னத்தம்பி

மண்நாடலங்கரித்த நாள்: 08 - 09 - 1925

திருநாடலங்கரித்த நாள்: 06 - 07 - 1989

ஆண்டொன்று சுழிந்ததையா
ஆண்டவர் பாதம் நீர் சென்று
ஆயிரம் ஆண்டுகள் சுழிந்தாலும்
ஆறிடுமோ எம் துயரம்

இதயம் துவளுதையா உம் நினைவு
இதயத்தை வாட்டுதையா
இயேசுவின் கிருபையோ - எம்
இதயத்தை தேற்றுதையா

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்.

பிறவுண் றோட்,
கொக்குவில் கிழக்கு.

[13571]


## இடமாற்றம்

### மகேந்திரராஜ் அன் கோ

163, ஸ்ரான்லி வீதியில் இயங்கி வந்த எமது வாட்டர்பம் உதிரிப்பாகங்கள் விற்கும் ஸ்தாபனம் சண்டிலிப்பாய் றாஜா [RAJA] SCHOOL இற்கு முன்பாக மாற்றப்பட்டுள்ளது. என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

★ வில்லியர்ஸ் ★ றொபின் ★ வூசிலி வாட்டர்பம்

(RAJA SCHOOL இற்கு முன்பாக)

அன்ன வாசா, சண்டிலிப்பாய்.

[13573]


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### கனகராஜா சத்தியராஜ்

தாயின் மடியில்: 23 - 01 - 1986

மண்ணின் மடியில்: 04 - 07 - 1989

அன்புத் திருமகனே உனது தாயின் வயிற்றில் பிறக்கும் போதே கொடிய நோயுடன் ஆண்டவன் படைத்தனன் அந்த நோயினின்று மீட்பதற்கு பெற்றோர் பட்ட துன்பமோ எண்ணுதற்கரியது.

எங்கள் அன்புச் செல்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல பத்திரகாளியை வேண்டுகின்றோம்.

அப்பா, அம்மா, அண்ணா,
அக்கா, தங்கைமார்.

காளிகோவிலடி,
திருநெல்வேலி.

[illegible]


## இட மாற்றம்

208, ஸ்ரான்லி வீதியில் இயங்கிய

### ஹிமாலயா மரக்காலை

C.T.B. டிப்போ முன் ஒழுங்கை,

கலைவாணி வீதி,

(கலைவாணி சன சமூக நிலையத்திற்கு முன்வீடு)

கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்

இயங்குகின்றது.

எம்மிடம் கிளிசப்பு, மா, ½'' கிளிசப்பு, ½'' வெள்ளை சப்பு, பலகை வகைகளும் 4x2, 2x2, 2x1, றீப்பை வகைகளும், பீலிங், மோல்டிங், சீலிங் பலகை பெற்றுக் கொள்ளலாம்.

[13574]


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

### சிவபாதசுந்தரம் கலாதீபன்

படைப்பு: 16 - 12 - 1966

அழிப்பு: 28 - 06 - 1988

திதி: 06 — 07 — 1990


எங்கள் பாசக் கலாதீபனே
உள்ளத்தில் ஒளி விளக்காய் ஒளிவிட்டு
இரண்டு நிறைவுற்றது
ஆண்டு பல சுழிந்தாலும் உமது
அன்பான நினைவுகள் கலையாது

உமது பிரிவால் துயருறும்
பாசமிக்க அப்பா, அம்மா,
அண்ணாமார், அக்கா, மாமா,
உறவினர், நண்பர்கள்.

''கலாதீபம்''
[illegible]
[illegible]

[சி-4788]

## ஓராண்டு நினைவஞ்சலி



செல்வன்

### கந்தசாமி கிருஷ்ணகுமார் (ராஜன்)

தோற்றம்: 31 - 5 - 1968

மறைவு: 17 - 7 - 1989

எங்கள் செல்வம் கிருஷ்ணா!
ஓராண்டு ஓடி மறைந்தாலும்
நீறான உன் உருவம் நீங்காது!
நினைவில் இருந்து நீங்காது!!
பாழும் விதியென்று பலரும் மொழிந்தாலும்
நாளும் உருகியே நலிகின்றோம் நினைவாலே
பெற்ற தாயும் பிறந்த சோதரரும்
மற்றும் உன் நண்பரும்
கண்ணீரும் வற்றியே கல்லாகி விட்டனரே
குமார்! குமார்! என்று குமுறியழுதாலும்
மீண்டும் வரமாட்டாய்! வரமாட்டாய்!!
என் செய்வோம்!!!
ஆண்டவனை வேண்டியே அஞ்சலி செய்கின்றோம்.

ஆத்ம சாந்திக்காய் ஆண்டொன்றாய் நாமிங்கு.

தாய், சகோதரர், மருமக்கள்.

கற்பொக்கனை,
உடுவில், சுன்னாகம்.

(13495)

## முதலாண்டு நினைவஞ்சலி



### அமரர். மு. நல்லையா

FCMA [England]

பட்டயம் பெற்ற மேலாண்மைக் கணக்கறிஞர்

இகம்:- 25 - 09 - 1924

சிவபதம் பூர்வபக்க சதுர்த்தசி:- 16-07-1989

அருட்குறைவில்லை, பொருட்குறைவில்லை, புகழ்க்குறைவில்லை, உன்புண்ணியத்தால், மருட்குறைஒன்றேனும் வைத்திலை எங்கட்கு! மாகுறையோ! நீயின்றி இருடகுகையினதெம் இல்லம்!

நினைவுகூரும்,

திருமதி சகுந்தலா நல்லையாவும்
புத்திரி, புத்திரர்கள், மருமகள்மார்,
மற்றும் பேரன்.

பரன்கிரி,
கைதடி.

(13569)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### காட்சிகள் தெரியவில்லையா?

தமிழ்ப் பகுதிகளில் விமானத் தாக்குதல் நடத்தி, ஷெல் வீச்சுக்கள் நடத்தி அப்பாவிப் பொதுமக்கள் கொலை செய்யப்படுவதை கண்டித்து, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் விமானத் தாக்குதல் கடந்த மாதம் 19ஆம்திகதி இலேசாக ஆரம்பிக்கப்பட்டது. அதன்பின்னர் அடிக்கடி நடந்த விமானத் தாக்குதல்களில் இறந்தவர்கள் பொதுமக்கள் தான். சேதமடைந்த உடைமைகளும் தமிழ் மக்களினுடையவைதான். விமானத் தாக்குதல்களால் இறந்தவர்களைவிடப் படுகாயம் அடைந்தவர்கள் மிகப் பல மடங்கினர்.

விடுதலைப் புலிகளோடு தான் யுத்தம். அது தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல. இராணுவ நடவடிக்கைகளின்போது இயன்றவரை பொதுமக்கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்று படையினருக்கு ஜனாதிபதி தினமும் உபதேசித்து வருகிறார் — இவ்வாறு அரசின் அங்கங்களான, அதன் கட்டுப்பாட்டில் உள்ள, வானொலி, தொலைக்காட்சி மூலம் நாளாந்தம் பிரசாரம் செய்யப்படுகிறது.

வடக்கு-கிழக்கில் தமிழ் மக்கள் கொல்லப்படவில்லையென்று வெளி உலகத்தை நம்ப வைக்க சகல விதமான பிரசார உத்திகளும் கையாளப்படுகின்றன.

ஆனால் தமிழ்ப் பிரதேசங்களில் வாழ்பவர்கள் உண்மையை அறிவார்கள் அவலங்களை அனுபவிப்பவர்கள் அவர்களே. இங்கு நடப்பவற்றைச் சரியாக எடுத்துச் சொல்வதற்கு, தமிழ் மக்களைவிட வேறு சாட்சிகள் எவரும் இருக்க முடியாது.

ஏனோ தெரியவில்லை; தாம் படும் அவலங்களை, கஷ்டங்களை, தாக்கு நேர்ந்துள்ள இழப்புக்களைப்பற்றி எடுத்துச்சொல்லி ஸ்தாபன ரீதியாக கண்டனக் குரல் எழுப்புவதற்கு எவருக்கும் மனத்துணிவு வரவில்லை.

ஒரு பெரியபுள்ளி இறந்துவிட்டால், பெயரை வைத்து அனுதாபச் செய்திகள் வெளியிட்டு, அவற்றைப் பத்திரிகைகளில் போட்டுத்தமக்குப் பிரசாரம் தேடுவதற்கு சடித்த் தலைப்புச் சங்கங்கள் எல்லாம் படும்பாடு — அப்பப்பா!..!

ஆனால் தமிழ் மக்கள் அநியாயமாகக் கொல்லப்படுகிறார்கள் என்பதை நேரில் கண்டும், பாதிக்கப்படுகிறார்கள் என்பதைத் தாமே அனுபவித்தும் அவை குறித்துக் கண்டனக் குரல் எழுபப எவரும் முன்வரவில்லை இது வெட்கம்!

யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்துக்கும், தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கும் ஆகுதல் அந்த உணர்வு ஏற்பட்டதே என்பது ஒருவித ஆறுதல். உள்ளதைச் சொல்லி உலகுக்கு உணர்த்துவதற்கு வெகுசன எழுச்சி தேவைப்படும் இக்கால கட்டத்தில், மக்கள் மௌனமாக இருப்பது வேதனைக்கு உரியது!

தமிழ் மக்கள் கொல்லப்படுகிறார்கள். அவர்களின் உடைமைகள் நாசமாக்கப்படுகின்றன என்பதை வெளி உலகுக்குச் சொல்ல வேண்டிய கடமை, பொறுப்பு வேறு எவரையும் விடப் பாதிக்கப்படும் தமிழ் மக்களுக்கே அதிகம் உண்டு.

மக்கள் கொலை செய்யப்படுவதற்கும், அகதிகளாக்கப்படுவதற்கும் ஆட்சேபம் தெரிவித்து ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் மற்றும் வெகுசனப் போராட்டங்களை நடத்தி உண்மையை உலகுக்கு உரைக்க வேண்டும் என்று எந்த வெகுசன அமைப்பும் இது வரை எண்ணியதாகத் தெரியவில்லையே! பிரசைகள் குழுக்கள் முதல் முன்னணிகள், சங்கங்கள் வரை கண்களை மூடிக்கொண்டு, நடக்கும் காட்சிகளைக் காணாமல் இருக்கின்றனவா?

எமது கஷ்டத்தை அடுத்தவனைக் கொண்டு சொலல வைத்து விட்டு, நாம் தப்பி விடுவோம் என்று எல்லோரும் செயல் இழந்து இருப்பது தகாது.

## உணவு முத்திரை - ஜனசக்தி உதவி இடை நிறுத்தம்

யாழ்ப்பாணம் ஜூலை 6

உணவு முத்திரை, ஜனசக்தி கார்ட்டுகளுக்கான உணவுப் பொருள்கள் விநியோகம் ஆகியவை இந்த மாதம் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இவற்றுக்கான உணவுப் பொருள்கள் இதுவரை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டு வந்தன.

போதியளவு உணவுப் பொருள்கள் கையிருப்பில் இல்லாததாலேயே விநியோகம் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

உணவுப் பொருள்கள் போதியளவு வந்து சேர்ந்ததும் இவை வழங்கப்படும் என்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்க உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-10)

## மக்கள் இடம் பெயர்ந்த வீடுகளில் திருடர் கைவரிசை

குருநகர், ஜூலை 6

குருநகர்ப் பகுதியில் மக்கள் இடம்பெயர்ந்த வீடுகளில் திருட்டுக்கள் இடம்பெற்று வருகின்றன.

குருநகர் 2 ஆம் குறுக்குத் தெருவில் இருந்து இடம் பெயர்ந்து சென்றுள்ள மரியாம்பிள்ளை என்பவரது வீட்டில் பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

அதேசமயம் குருநகர் அடம்பன் வீதியில் உள்ள அவறான் கஸ்பார் என்பவரது வீட்டிலும் மவுண்கார்மேல் வீதியில் தியோடர் கோமஸ் என்பவரது வீட்டிலும் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

(இ-51)

## சென்னைச் சிறையில் ஈழத்து மாணவர்களும்!

கொழும்பு, ஜூலை 6

சென்னைச் சிறையில் காவலில் வைக்கப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழர்களில், தமிழ்நாடு பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலும் வைத்திய, பொறியியல், சட்டத்துறை மாணவர்களும் அடங்குகின்றனர்.

இப்படி 'இந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழர்கள் கொலைக் குற்றவாளிகள் போல் பொலிஸாரினால் நடத்தப்பட்டு, மிருகங்கள் போல் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வந்திருப்பதாக 'இந்து' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

[ஒ-எ]

## கரை ஒதுங்கிய படகு

வேலணை, ஜூலை 6

வேலணை துறையூர் கடற்கரைப் பகுதியில் புளு ஸ்ரார் மரீன் என்ற புதிய பிளாஸ்ரிக் படகு ஒன்று கரை ஒதுங்கியது.

இந்த பிளாஸ்ரிக் படகில் BSM/S.S/839 என்ற இலக்கம் பொறிக்கப்பட்டுள்ளது.

இப்படகுக்குரியவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் வேலணை துறையூர் கடற்றொழிலாளர் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (ஒ-167)

### பல்கலைக்கழக அனுமதி:

## விண்ணப்ப திகதியை நீடிக்க ஆணைக்குழுவிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 6

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை அனுப்பும் திகதியை நீடிக்குமாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை இம் மாதம் 14 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பவேண்டும் என்று பல்கலைக்கழக ஆணைக்குழு அறிவித்திருந்தது.

தற்போதைய சூழ்நிலையால் தபால்சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. வங்கிக் கட்டளைஎடுக்க வங்கிகள் இயங்கவில்லை. ஆகவே திகதியை நீடிக்கவேண்டும் என்று யாழ் பல்கலைக்கழக, செயலக அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-3)

## வடக்கு - கிழக்கு பாதிப்பு ரூ. 2 கோடி மருந்து வகைகள்

கொழும்பு ஜூலை 6

வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரண்டு கோடி ரூபா பெறுமதியான மருந்து வகைகளை ஜப்பானிய அரசு நன்கொடையாக வழங்கும்.

மருந்து வகைகளும் வைத்திய உபகரணங்களும் யுனிசெப் நிறுவனத்துக்கு ஜப்பானிய அரசு மூலம் வழங்கப்படும்.

இந்த நிறுவனம் இவற்றை சேகரித்து அரசு மருத்துவமனைகளுக்கும் அரசுசார்பற்ற செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சமூக ஸ்தாபனங்களுக்கும் விநியோகிக்கும்.

## உமாகாந்தன் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்கு

பலாலியில் ஸ்ரீலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் களப்பலியான வீரவேங்கை உமாகாந்தனின் பூதவுடல் சாவகச்சேரி சந்தை மைதானத்தில் பொது மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

மாணவர்களும் பொது மக்களும் பெருந்திரளாகக் கலந்து கொண்டு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

## மன்னார் நகரினுள் தமிழர் பிரவேசிக்க முடியாத நிலை

யாழ்ப்பாணம், ஜூலை6

கடந்த 16 ஆம் திகதி மன்னார் மாவட்டத்துக்குத் தரை மார்க்கமாகச் செல்லும் இருபாதைகளும் துண்டிக்கப்பட்டன. இதனால் தமிழர் நகரத்துக்குள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இப்படிக் கூறினார் மன்னாரைச் சேர்ந்த மாணவன் ஜெயபாலன்.

மன்னார் நிலைமை குறித்து உதயன் செய்தியாளரிடம் அவர் மேலும் கூறியதாவது:—

கடந்த 16 ஆம் திகதி மன்னார் கோட்டை, பொலீஸ் நிலையங்கள் தாக்கப்பட்டவுடன் அங்கு நிலைமை மோசமடைந்தது

நகரில் உள்ள கடைகள் பூட்டப்பட்டன அரச அலுவலகங்கள் இயங்கவில்லை. உணவுப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது.

தமிழ்மக்களோ, வாகனங்களோ நகரத்துக்குள் பிரதான பாதைகள் ஊடாக அனுமதிக்கப்படவில்லை.

வவுனியா, அனுராதபுரம் ஆகிய இடங்களுடன் இணைக்கும் ஆலங்குளம் பாதை இராணுவத்தினரால் தடை செய்யப்பட்டது. அதேபோல் சங்குப்பிட்டி - மன்னார் பாதையும் தள்ளாடி இராணுவத்தினரால் தடைசெய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து மன்னாரில் இருந்து தமிழ் மக்கள் வள்ளங்கள் மூலம் வெளியேறி திருக்கேதீஸ்வரம், வங்காளவாடி, விடத்தல்தீவு ஆகிய இடங்களுக்கு இடம்பெயர்ந்தனர்.

மன்னாரிலிருந்து அவசரத்தில் வெளியேறியவர்கள் பின்னர் தமது பொருள்களை வள்ளம் மூலம் சென்று எடுத்து வந்தனர்.

இப்படி அவர் கூறினார்.

[இ-3]

## மன்னார் மாவட்ட தபால் ஊழியர்களின் சம்பளம்

மன்னார் மாவட்ட தபால் திணைக்களத்தின் கீழ் கடமை ஆற்றும் ஊழியர்களுக்கான ஜூன் மாதச்சம்பளம் 3 மாதத்துக்குரிய ஆபத்து அலவன்ஸ் ஆகியவை சேர்ந்து எழுதப்பட்ட காசோலைகள் தற்போது நுணாவில்கிழக்கில் வசிக்கும் மன்னார் மாவட்ட அஞ்சல்திணைக்கள காசாளர் திரு. வி. வணததாசன் பொறுப்பில் உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

காசோலைகள் யாழ். தபால் திணைக்கள அத்தியட்சகர் காரியாலயத்தில் எழுதப்பட்டுள்ளன.

இவற்றை ஊழியர்களிடம் கையளிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாலேயே காசாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன'

(இ-118)

## கோப்பாய் வைத்தியசாலை

கோப்பாய் வைத்தியசாலை பொது மக்களுக்கு இக் கட்டான நிலையிலும் திருப்திகரமாக சேவையை வழங்கிக் கொண்டிருக்கிறது.

தற்பொழுது மூடப்பட்டுள்ள வைத்தியசாலைகளின் வைத்தியர்கள், தாதிமார்கள், மற்றும் ஊழியர்கள் கோப்பாயிலும் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இதனால் நோயாளிகள் தூர இடங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என வைத்திய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (இ-10)

## துர்க்கை அம்மன் ஆலய முகாமில் 500 குடும்பங்கள்

மயிலணி, ஜூலை 6

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் அமைந்துள்ள அகதி முகாமில் தங்கியுள்ள 500 குடும்பங்களுக்கு தேவையான உணவு மற்றும் வசதிகளை தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்துடன் இணைந்து துர்க்கா தேவி தேவஸ்தானம் வழங்கி வருகிறது.

ஆலயத்தில் ஐந்து மண்டபங்களில் தங்கியுள்ள இந்த அகதிகளின் தேவைகளை உடனக்குடன் செய்து கொடுக்க செஞ்சிலுவை, சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ்தொண்டர்களும் கடமை ஆற்றுகிறார்கள்.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு. சி. சிவமகாராசா, துர்க்கையம்மன் தேவஸ்தான பரிபாலன சபைத் தலைவர் செல்வி அப்பாக்குட்டி ஆகியோர் அகதிகள் நலன்களை கவனிக்கிறார்கள்.

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தவர்களும் வேண்டிய உதவிகளை வழங்கி வருகிறார்கள். (இ-89)

## வலிகாமம் மேற்கு பகுதியில் தங்கி உள்ள குடும்பங்கள்

அராலி, ஜூலை 6

தற்போதைய யுத்தநிலமை காரணமாக இராணுவமுகாம்களுக்கு அண்மையில் உள்ளவர்களும் வெளிமாவட்டங்களில் இருந்து வந்தவர்களுமாக ஐயாயிரம் குடும்பங்கள் வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தங்கியுள்ளன.

இவர்கள் சுழிபுரம் விக்ரோரியாக்கல்லூரி சங்கானை சைவப்பிரகாசவித்தியாசாலை கிராமநீதிமன்றம் அராலி மேற்கு வள்ளியம்மை ஞாபகார்த்தவித்தியாசாலைஆகியவற்றிலும் ஏனையோர் உறவினர் நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் இலவசமாக ஒரு வார உலர் உணவுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(இ-12)

## விமானத்தை அண்ணாந்து பார்க்காதீர்கள்; மனவலிமையுடன் இருந்தால் தாக்குப் பிடிக்கலாம்

குண்டு வீச்சானது பல்வேறு வகைப்பட்ட கருவிகளால நடத்தப்படினும், ஆகாய விமானங்களின்மூலம் போடப்படும் குண்டுகளே அளவில் பெரியவையாகவும், ஏனையவற்றுடன் ஒப்பிடும் போது கூடியளவுதாக்கத்தை அளிக்கக் கூடியனவாகவும், உள்ளன.

எனவே இவற்றுக்கெதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளில் நீங்கள் கூடியளவு கவனம் செலுத்துதல வேண்டும்.

ஆகாய விமானத் தாக்குதலுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் யாவை? இக் கேள்விக்கான பதிலனது தரப்படுமுன்னர் உங்கள் மனதில் நீங்கள் கற்பனை செய்து வைத்திருக்கும் விமானத் தாக்குதலைப் பற்றிய மோசமான, பாரதூரமான கற்பனைகளை அகற்றி விடுங்கள்.

### சிதறி ஓடாதீர்கள்

ஏனெனில் ஆகாய விமானமானது உங்கள் மனவுறுதிக்கெதிரான ஆயுதமேயாகும் வெறுமனே பயங்கர சத்தத்தை எழுப்பிக் கொண்டு தாழ்வாகப் பறந்து வந்து தாக்குவது மக்களிடையே பீதியையும், குழப்பத்தையும் உண்டு பண்ண வேண்டும் என்ற ஒரேயொரு நோக்கத்தினாலேயாகும். அவர்கள் எதிர்பார்த்தபடி நீங்கள் சிதறி ஓடுவீர்களேயாயின் பெருமளவு பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டவர்களாவீர்கள்.

ஆனால் உறுதியான மன வலிமையுடன் எந்தவொரு தாக்குதலுக்கும் தாக்குப் பிடிக்கக்கூடிய ரீதியில் திட்டமிட்டு செயலாற்றுவீர்களேயாயின், குண்டு வீச்சுக்களினால் பெருமளவு உயிர்ச் சேதம் எதனையும் ஏற்படுத்த முடியாது.

### குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பது எப்படி?

தமிழ்ப்பகுதிகளில் இப்போது விமானத் தாக்குதல்கள நாளாந்தம் நடைபெற்று வருகின்றன அவற்றால் பொது மக்களே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்

விமானத் தாக்குதலில் இருந்து பாதுகாக்க என்ன செய்ய வேண்டும்? இதனை ஒவ்வொருவரும் இப்போது நன்றாக அறிந்து வைத்திருக்க வேண்டும்

வாசகர்களின் நன்மை கருதி சில ஒழுங்கு முறைகளை இக்கட்டுரை மூலம் தருகிறோம். இதனைத் தவறாது வாசித்து உங்களை நீங்களே காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

ஜேர்மனியர்கள் லண்டன் நகரின் மீது 1 ஆம் உலகப் போரின் போது நிகழ்த்திய குண்டு வீச்சுத்தாக்குதலின் போது வீசப்பட்ட 128 குண்டுகளினால் 162 பேரை மட்டுமே கொல்லக்கூடியதாக இருந்தது. இதன் போது 432 பேர் காயமுற்றனர். வேறொரு சம்பவத்தின் போது 528 குண்டுகள் போடப்பட்ட இடத்தில் 916 இழப்புகளும், 2500 பேர் காயமுறவும் காணப்பட்டது.

மேற்கூறிய சம்பவங்களுக்கு பயன்படுத்தப்பட்ட விமானங்களானவை அநேகமாக 1 தொன் எடையுள்ள குண்டுகளை காவிச்சென்று வீசக் கூடியனவாய் இருந்தன. ஆனால் ஸ்ரீலங்கா அரச படையினரிடம் இரண்டு 551 இறாத்தல் (250 கிலோ) எடையுடைய குண்டுகளை கொண்டு சென்று வீசக் கூடிய 5 விமானங்களும், தற்பொழுது இத்தாலியில் இருந்து தருவிக்கப்பட்ட இரண்டு 276 இறாத்தல் (125 கிலோ) எடையுடைய குண்டுகளை கொண்டு செல்லக்கூடிய 6 விமானங்களும் மாத்திரமே உண்டு.

விமானங்கள் குண்டுவீசும் போது சண்டபடி ஓடுவது எந்தவித பலனையும் அளிக்கப்போவதில்லை எந்த ஒரு குண்டு வீச்சின் போதும் நேரடியாக குண்டு விழும் இடத்தில் ஏற்படும் உயிரிழப்பை விடவும், குண்டு வெடிப்பின்போது உருவாக்கப்படும் சிதறு துண்டுகளே பெருமளவு உயிர்ச் சேதங்களை ஏற்படுத்துகின்றன.

### அண்ணாந்து பார்க்காதீர்கள்

விமானங்கள் குண்டு வீச வரும் போது ஒரு போதும் ஒரு கூட்டமாக நின்று மேலே அண்ணாந்து பார்க்காதீர்கள் இயலுமானவரை நன்கு தூரத் தூர விலகி உங்கள் முகங்களை விமானத்திற்கு காட்டாதவாறு இருங்கள் ஏனெனில் மனித முகமொன்றானது மேலிருந்து பார்க்கும் பொழுது வேறெதனையும் விட இலகுவில் தெரியக்கூடியதாகும். உங்கள் முகங்கள் தெரியாவிடின் உங்களை விமான ஓட்டிகள் காணும் வாய்ப்பு குறைகின்றது

தற்செயலாய் கண்டு கொண்டாலும் உங்களை நேரடியாக தாக்கும் வண்ணம் குண்டு வீசுவது கடினமாகும் எனவே அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் யாதாயினும் மறைப்புகளினுள் சென்று விடுவதே பாதுகாப்பானதாகும்.

குண்டு வீச்சொன்று நிகழும்போது, வெவ்வேறு ஐந்து சந்தர்ப்பங்களை எடுத்து அவற்றுக்குரிய பாதுகாப்பு வீதம் பின்வருமாறு காணப்படுகிறது.

1. அகழியொன்றினுள் புகலிடம் தேடுவது - 95% பாதுகாப்பானது

2. கல்வீடு ஒன்றினுள் புகலிடம் தேடுவது - 90% பாதுகாப்பானது.

3 தாழ் மறைப்புகளுக்குப் பின்னே படுப்பது 67% பாதுகாப்பானது

4 திறந்த வீதியொன்றில் குப்புறப் படுப்பது 50% பாதுகாப்பானது

5 திறந்த வீதியொன்றில் எழுந்து நிற்பது - பாதுகாப்பே கிடையாது.

இதிலிருந்து அகழி அல்லது உறுதியான கட்டிடமொன்றினுள் பாதுகாப்புத் தேடுவதே உயிரிழப்பைக் குறைப்பதற்குரிய மிகச் சிறந்த வழிமுறையாகத் தெரிகின்றது

இருப்பினும் மக்களது அன்றாட வாழ்க்கையின் வேறுபட்ட பல சந்தர்ப்பங்களை எடுத்து நோக்கும் போது, பலவற்றில் உடனடியாக அகழியையோ அல்லது உறுதியான கட்டிடமொன்றையோ தேடி ஓடுவதென்பது சாத்தியமற்றது என்பதனால், முதலில் அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் செய்ய வேண்டிய செயல்முறைகள் கீழே தரப்படுகின்றன. ஒவ்வொரு செயல்முறைகளின் போதும் நீங்கள் நெருக்கமாக இராது தூரத் தூர விலகி இருக்க வேண்டுமென்பது மிக முக்கியமானதாகும்.

(தொடரும்)

### தகவல் மேடை

## காயம் அடைவோரை காப்பாற்றுவதற்கு....

இப்போது இடம் பெறும் இராணுவ நடவடிக்கைகளினால் காயம் அடைவோருக்கும் உயிர்ச்சேதம் ஏற்படாது காப்பதற்கு முதலில் இரத்த ஒழுக்கை நிறுத்துவது அவசியம்.

அது பற்றிய வழிமுறைகள் வருமாறு:-

01. காயம் பட்டவரை உடன் படுக்க வையுங்கள்.
02. காயம்பட்ட பாகத்தை இயன்றவரை உயர்த்தி வையுங்கள்.
03, ஏற்கனவே இரத்தம் கட்டிப்போய் இருந்தால் துடைக்காதீர்கள்.
04. எடுக்கக்கூடிய அன்னிய வஸ்து தென்பட்டால் எடுத்து விடுங்கள்.
05. காயங்களை ஈரலிப்பான துணியால் அணை, சலவாத்து டு. 3'' பண்டேஜ் உபயோகித்துக் கட்டுங்கள்
06 மார்பில் அல்லது முதுகில் ஏற்படின், வெளிக் காற்று உட்புகுந்து சுவாசத்தைக் குறைக்காதவாறு 6'' பண்டேஜ்ஜால் கெட்டியாகக் கட்டுங்கள்
07 அதிக இரத்த ஒழுக்கைக் காயத்தின்மீது அணை வைத்து நேராக அமுக்கி நிறுத்துங்கள்.
08 கட்டிய டண்டேஜ் மீது இரத்தம் கசிந்தால் அதன்மேல் கட்டுப போடுங்கள்
09 கை, காலில் அதிக இரத்தப் பெருக்கு ஏற்படின், ரப்பர் பண்டேஜ் காயத்திற்கு மேலே இறுகக் கட்டுங்கள், 15 நிமிடத்திற்கொரு முறை தளர்த்துங்கள்
10 எலும்பு முறிவு இருப்பின் சிம்பு அல்லது மட்டை வைத்துக் கட்டுங்கள்.
11 உடல் வெதுவெதுப்பாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள்
12 சுயநினைவிழந்த நிலையில் அல்லது சத்திர சிகிச்சை செய்ய வேண்டுமாயின் வாயால் எந்தப் பானமும் கொடுக்காதீர்கள்.
13 இரத்தப் பெருக்கைக் கண்டு காயப்பட்டவர் பயந்து போகலாம். இது இரத்தப் பெருக்கை அதிகரிக்கச் செய்யும். ஆறுதல் கூறித் தைரியம் ஊட்டுங்கள்
14 சுவாசம் குறைந்து போயின் செயற்கைச் சுவாசம் அளியுங்கள். வாய்க்கு வாய் சிறந்ததாகும்.
15. இருதயம் நின்றுவிடின் மார்பை அமுக்கித் தொழிற் படுத்துங்கள். (வெளிப்புற இருதய அமுத்தம்)
16 வைத்தியராக மாறாது உடன் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுங்கள்.

**ஒவ்வொரு வீட்டிற்கும் தேவையான முதலுதவிப் பொருள்கள்:**

பண்டேஜ் 3'' — 06, பண்டேஜ் 6'' — 04, ரப்பர் பண்டேஜ் 1'' — 04, பஞ்சு 500 grams, பிளாஸ்டர் 3'' — 1 Tin, கத்தரிக்கோல் 1 (சிறியது), பனடோல் 20, பிரிட்டோன் 10, டெட்டோல் — 1 சிறிய போத்தல், டோர்ச் லைட் — 01.

க. அருந்தவராஜா
(சென். ஜோன்ஸ் அமபுலனஸ் படை)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பாடசாலைப் பிள்ளைகளின் மதிய
உணவுத் திட்டத்திற்கு உகந்தது.

" ஜீவாகாரம் "

இதில் தேவையான அளவு கலோரி, புரதம், விற்றமின், தாதுப்பொருட்கள் அடங்கி உள்ளன.

அண்ணா தொழிலகம்
இணுவில்.


# உதயன்

06 - 7 - 1990 வெள்ளிக்கிழமை


15 கிறாம்

அண்ணா கோப்பி

100 வீதம் சுத்தமானது

இது கைதேர்ந்த தொழிலாளர்களினால் காற்றுப் புகாவண்ணம் அடைக்கப்பட்ட பைக்கட்டுகளில் வெளிவருகிறது, இதை வாங்கிப் பாவித்து,

இதன் வெற்றுப் பைக்கட்டுகள் 25 கொடுத்து ஒரு அப்பியாசக்கொப்பியை இனாமாகப் பெற்றுக் கொள்ளவும்.

## தமிழீழ மீட்பு நிதி கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 6 '' தமிழீழ மீட்பு நிதி'' சம்பந்தமான விளக்கக்கூட்டங்களும், தகவற்படிவங்கள் விநியோகிக்கும் வைபவங்களும் இன்று வெள்ளிக்கிழமை முதல் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பலஇடங்களில் நடத்தப்படவிருக்கின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித்தலைவர் திரு. கோ. மகேந்திரராசாவால் இது சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இன்று அச்செழுப்பகுதிக்கு, சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், நாளையும், மறுதினமும் புத்தூர் கிழக்குப் பகுதிக்கு புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியிலும். 9ஆம், 10 ஆம் திகதிகளில் புத்தூர் மேற்குப் பகுதி மக்களுக்கு சோமஸ்கந்தா கல்லூரியிலும் இந்த கூட்டங்கள் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளன. (இ-3)

# வடக்கு - கிழக்கு மாகாணசபையை இயங்கச் செய்வதே நோக்கம்

## திருத்தச் சட்டமூலத்தை சமர்ப்பித்து பெஸ்டஸ் உரை

கொழும்பு, ஜூலை 6 வடக்கு-கிழக்கு மாகாண சபையை இயங்கச் செய்வதே இச்சட்ட மூலங்கள்கொண்டு வரப்படுவதன் நோக்கமாகும் வடக்கு - கிழக்கு மாகாண மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கவும் இந்த சட்டமூலங்கள் வழிகோலும்.

மாகாணசபைகள் சட்டம், மாகாணசபைகள் தேர்தல் சட்டம் ஆகியவற்றைத் திருத்தும் சட்டமூலங்கள் நேற்றுக்காலை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது சட்டமூலங்களைச் சமர்ப்பித்து உரையாற்றிய பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா மேற்கண்டவாறு கூறினார்

அவர் மேலும் பேசிய தாவது:-

இனப்பிரச்சினையைத் தீர்த்துவைக்க அரசு எடுக்கும் நடவடிக்கைகள் வெளிநாடுகளிலும் பாராட்டைப் பெற்றுள்ளன.

மாகாணசபை முறை ஒரு புதிய நிர்வாக முறையாகும். அதனை அமுல்செய்யும்போது பிரச்சினைகள்எழுவதுசகஜமே அப்பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றுக்குப் பரிகாரம்காண விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்''.

இப்படி அவர் கூறினார்.

சுதந்திரக் கட்சி எம்.பி நிமால் சிறிபால டிசில்வா பேசுகையில் கூறியதாவது:-

இத்திருத்தச் சட்ட மூலங்கள் வடக்கு - கிழக்கு மாகாணசபைக்கு மாத்திரம் அன்றி ஏனைய மாகாண சபைகளுக்கும் பொருந்தும் விதத்தில் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

இதன் மூலம் ஆளுநர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப சபை உறுப்பினர்களைப் பதவி நீக்கஞ் செய்ய இடமளிக்கப்படுகிறது என்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி திரு. வி.கருணாகரன் பேசுகையில்: தமிழ் மக்களுக்கு எதிராகச் சண்டையிட்டு வரும் பாஸிசக் குழுக்களே தற்போது வடக்கு-கிழக்கில் எழுந்துள்ள நிலைமைக்குப் பொறுப்பாகும்.

அந்தப் பகுதியில் சமாதானத்தை நிலைநாட்ட அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு எனது கட்சி ஆதரவு வழங்கும்'' என்றார்

சுதந்திரக் கட்சி எம்.பி தர்மசிறி சேனநாயக்கா பேசுகையில், ''வடக்கு-கிழக்கு பகுதியில் இப்போது நிலவும் நெருக்கடியான சூழ்நிலையில் அரசு ஏன் அவசரமாக இத்திருத்தச் சட்ட மூலங்களைக் கொண்டு வர வேண்டும்?'' என்று கேட்டார். (இ-எ)

## திருமலை நகருக்குள் சென்ற 2 முஸ்லிம்கள் கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 6 திருகோணமலை நகருக்குள் செல்ல இராணுவம் அனுமதித்த இரு முஸ்லிம் ஆசிரியர்களை ஊர்காவல் படையினர் வெட்டிக் கொலை செய்து கிணற்றில் போட்டனராம்.

திருகோணமலை நகரில் இருந்து வெளியேறிய முஸ்லிம் மக்கள் மீண்டும் நகருக்குள் செல்ல இராணுவத்தினர் அனுமதித்தனர்.

இந்த நிலையில் கடந்த 25 ஆம் திகதி பிரஸ்தாப இரு முஸ்லிம் ஆசிரியர்களும் நகருள் சென்றனர். அப்போதே இச்சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்பட்டது. (இ-3)

## யாழ். கோட்டையில் காயமடைந்துள்ள
## எஞ்சிய பத்துப் பேரையும் மீட்க முயற்சிப்போம் -ரஞ்சன்

கொழும்பு, ஜூலை 6 யாழ். கோட்டை முகாமில் காயமடைந்துள்ள எஞ்சிய பத்து இராணுவத்தினரையும் மீட்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும் என்று பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்னா நேற்றுத் தெரிவித்தார்.

நேற்று நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் இது குறித்து அவர் தெரிவித்ததாவது:-

யாழ் கோட்டை முகாமுக்குள் இன்னமும் மீட்கப்படாது இருக்கும் காயமடைந்த எஞ்சிய பத்துப் பேர்களுக்கும் மீட்புப் பணியின் போது கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட இராணுவ வைத்திய அதிகாரிகள் சிகிச்சை அளித்து வருகிறார்கள்.

சந்தர்ப்பம் ஏற்படும்போது காயமடைந்த அவர்களும் அங்கிருந்து ஏற்றிவரப்படுவார்கள்.

மீட்கப்பட்ட காயடைந்த ஏழு வீரர்களுக்கு கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரியில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

படையினர் கிழக்கில் காடுகளிலும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

தீவிரவாதிகள் கண்டுபிடிக்கப்படும் வரை தேடுதல் முயற்சி தொடரும்.

கிழக்கு மாகாணத்தில் சகஜ நிலைமை படிப்படியாக ஏற்பட்டு வருகிறது.

அம்பாறையில் எந்த வித பிரச்சினைகளும் இல்லை. மட்டக்களப்பில் மந்த கதியில் தான் சகஜநிலை திரும்பிக் கொண்டிருக்கிறது- என்றார். (அ-எ)

# பிரச்சினையை பேசித் தீர்க்கலாம் என்ற குழப்ப நிலை வேண்டாம்

## மில்லர் நினைவுக் கூட்டத்தில் யோகி

யாழ்ப்பாணம், ஜூலை 6 சிங்களத் தேசத்தோடு, தமிழ்த் தேசம் ஏதோ ஒரு வகையில் பேசி பிரச்சினையைத் தீர்க்கலாம் என்ற குழப்பம் தமிழீழத்திலே வாழுகின்ற மக்களுக்கு இருக்கக் கூடாது. தமிழீழம் என்ற ஒன்று கிடைக்கும் வரை எமது போராட்டம் ஓயாது. அதில் யாருக்குமே எந்தவித குழப்பமும் இருக்க வேண்டிய தேவை கிடையாது.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு: யோகரட்ணம் யோகி தெரிவித்தார்.

நேற்று நெல்லியடி மத்திய கல்லூரியில் கரும்புலி கப்டன் மில்லரின் 3 ஆவது நினைவு தினக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே திரு. யோகி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டத்திற்கு விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் குணம் தலைமை வகித்தார். கப்டன் மில்லரின் தாயார் குத்து விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

திரு. யோகி தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று சிங்களத் தேசம், தமிழ்த் தேசத்திற்கு எதிராக ஒரு போராட்டத்தை நடத்துகின்றது. பல கோடி ரூபா பாதுகாப்பு நிதிக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. மாணவருக்கு மதிய உணவுக்கு அரசு கொடுத்த நிதியையே மாணவரிடமிருந்து இனவெறியூட்டி மீண்டும் அரசு பாதுகாப்பு நிதிக்கு வாங்குகிறது.

நாம் எமது மண்ணை நிரந்தரமாக மீட்க வேண்டுமானால் சகலரும் ஆயுத மேந்த வேண்டிய காலம் வந்து விட்டது யாழ். மாவட்டத்திலிருந்து குமணைவரை எமது போராட்டம் பரந்து நிற்கிறது. தமிழீழத்திற்கு ஒரு படை வேண்டும் அந்த படைக்கு பெருமளவு பலம் வேண்டும். அதற்கு அனைவரும் என்று சேர்ந்து எமது கரத்தை வலுப்படுத்த வேண்டும்— என்றார்.

கூட்டத்தில் கவிஞர் வாஞ்சிநாதன், மகளிர் படையைச் சேர்ந்த ஜெலீமா, விடுதலைப் புலிகளின் வடமராட்சி பொறுப்பாளர் சூசை, மக்கள் முன்னணியின் பிரமுகர் செங்கதிர் ஆகியோரும் உரையாற்றினர். [அ.9]

## யாழ். உணவு---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
என்று தெரிவித்திருந்தார்.

இதேவேளை யாழ் மாவட்டத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் கையிருப்புகள் முடிவடைந்துவிட்டதாக யாழ் அரசாங்க அதிபர், அத்தியாவசிய சேவைகள் நாயகத்துக்கு அறிவித்திருக்கிறார்.

அத்தியாவசிய உணவுப் பொருள்களின் கையிருப்பு முடிந்துவிட்டதால் ஒருமாதத்துக்குத் தேவையான 5ஆயிரம் தொன் அரிசி, 3 ஆயிரம் தொன் மா, 2 ஆயிரம்தொன் சீனி ஆகியவற்றை உடன் அனுப்பிவைக்குமாறு, அரச அதிபர் அத்தியாவசிய சேவைகள் நாயகத்திடம் வலியுறுத்தி உள்ளார்.

தாம் கேட்டுள்ள உணவுப் பொருள்களில் ஒரு பகுதியை யாவது ஓரிரு நாட்களில் தரை மார்க்கமாகக் கொண்டு வர முயற்சி எடுத்து வருவதாக அரசாங்க அதிபர் நேற்றுத் தெரிவித்தார்.

### கிளிநொச்சியில் இருந்து நெல்

இதேவேளை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் அரிசி கையிருப்பில் குறைந்து வருவதால், கிளிநொச்சியிலிருந்து நெல்லைக் கொண்டுவர உதவுமாறு ப. நோ. கூ. சங்கங்கள் அரச அதிபரிடம் கேட்டுள்ளன.

தனியார்துறையினர் வசம் உள்ள அத்தியாவசிய உணவுப் பொருள்கள் பற்றிய சரியான புள்ளிவிவரங்கள் தெரியாது.

பிறமாவட்டங்களில் இருந்து அகதிகளும் யாழ் மாவட்டத்திற்கு வந்துள்ள பின்னணியில், உணவுப்பொருள் கையிருப்புக் குறித்துச் சரியான நிலை என்னவென்று தெரியாமல் மக்கள் பஞ்சநிலை ஏற்படுமோ என்று அச்சம்கொண்டுள்ளனர். (அ-3-10)

## தொடர்ந்து எரிகிறது

யாழ்ப்பாணம், ஜூலை6 காங்கேசன்துறை சிமெந்து ஆலைப்பகுதியில் விழுந்த ஷெல்லினால் அங்குள்ள டீசல் தாங்கிகள் தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்கின்றன.

நேற்று முன்தினம் மூண்ட தீ நேற்றுவரை எரிந்து கொண்டிருந்தது. (ஒ)

## போராளி வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 6 வயாவிளான் பகுதியில் நேற்று ஸ்ரீலங்கா படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் பிரதீப் [கொக்குத்தொடுவாய்] என்ற போராளி வீரமரணமடைந்தார்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசமணி ஞானப்பிரகாசம்

(இளைப்பாறிய ஆசிரியை திருக்குடும்பக் கன்னியர் மடம் யாழ் )

தெல்லிப்பளை வீமன்காமத்தைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி இராசமணி ஞானப்பிரகாசம் காலமானார். இவர் இளைப்பாறிய தலைமை ஆசிரியர் சுவாம்பிள்ளை புண்ணியசிங்கம் ஞானப்பிரகாசத்தின் அன்பு மனைவியும், திருமதி ஜோண் ஜோர்ஜ் ஆசிரியை (திருக்குடும்பக் கன்னியர்மடம், இளவாலை), திருமதி டெய்சி அன்ரனி, காலம் சென்ற அன்ரன் புவிமன்னன், அலோசியஸ், ஜெயமன்னன், திருமதி பத்மினி மகேசன்(பொகவந்தலாவ), மேசி, ஜெயராணி (ஆசிரியை. புனித திரேஸா மகளிர் கல்லூரி, அச்சுவேலி), திருமதி பாமா ஆனந்த் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜோண் ஜோர்ஜ் (சுகாதார பரிசோதகர், மானிப்பாய்), அன்ரனி (காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபனம்), டாக்டர் மகேசன் (பொகவந்தலாவ), முல்க்ராஜ் ஆனந்தன் (சவுதி அரேபியா), டொறின் செல்வராணி (சூராவத்தை) ஆகியோரின் அன்பு மாமியாரும், றோய், றீனி, றியன்சி (ஜேர்மனி), றமினி, றெனோல்ட், றாகினி, றீவ்ஸ், யூட் மதியழகன், யூண் கலைவாணி, பொபி, பேட்டி, பெனி, மினோ, றொனி, மாலினி, பாமினி, ஆகியோரின் அருமைப் பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் சூராவத்தை சுன்னாகம் இல்லத்திலிருந்து இன்று காலை 10 மணியளவில் எடுத்து செல்லப்பட்டு ஏழாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

சூராவத்தை,
சுன்னாகம். (13578)

## தாமோதரம்பிள்ளை நாச்சிப்பிள்ளை

பாலாவோடை களபூமி காரைநகரைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை நாச்சிப்பிள்ளை 04 07. 90 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளையின் அன்பு மனைவியும் துரைராசா [இளைப்பாறிய பிரதம கணக்காளர் வீடமைப்புத் திணைக்களம் வெள்ளவத்தை] பொன்னம்மா, சரஸ்வதி, செல்லத்துரை [மனேஜர்-மொகமெட் அலி அப்துல்அலி, யாழ்ப்பாணம்] சிவப்பிரகாசம் [இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர் - வவுனியா] அன்னபாக்கியம் ஆகியோரின் அன்புத்தாயாரும் சதாசிவம், இராசமணி, தியாகராசா, சோமசுந்தரம் [பதிவாளர் - காரைநகர்] சிவபாக்கியம் [ஆசிரியை வவுனியா மகளிர் மகாவித்தியாலயம், றம்பைக்குளம்] ஆகியோரின் அன்பு மாமியாரும் புஸ்பராசா [வைத்திய கலாநிதி], சிவராசா [பொறியியலாளர்], ஸ்கந்தராசா, கனகலிங்கம் [கிராம சேவையாளர் வவுனியா], சண்முகராசா, லக்குணராசா, தியாகலிங்கம் [இத்தாலி], தியாகேஸ்வரி, சுகந்தி. கமலாதேவி [ஆசிரியை பாலாவோடை த.க. பாடசாலை], யோகேஸ்வரி, புஷ்பநாயகம் [மாணவன் யாழ். இந்துக்கல்லூரி], செந்தூரன் [மாணவன், காரைநகர் இந்துக்கல்லூரி], ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் தகனக்கிரியைகள் 04 07. 90 புதன் கிழமை அன்று தில்லை மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- **தா. துரைராசா**
**தா.செல்லத்துரை**
**தா.சிவப்பிரகாசம்**

(13576)

## மூத்ததம்பி சரவணமுத்து

கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைச் சேர்ந்த மூத்ததம்பி சரவணமுத்து அவர்கள் 22-06-1990 அன்று அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் நாகம்மாவின் அன்புக் கணவரும், திருமதி இராஜமலர் தில்லைநடராஜா [எழுதுவினைஞர். உதவி அரசாங்க அதிபர் பணிமனை, வவுனியா தெற்கு. தமிழ் பிரிவு], திரு. கிருஷ்ணகுமார் [இணைச் செயலாளர். பொறியியல் மாணவர் மன்றம் - தொழில் நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்], சுரேஸ்குமார் [மகாஜனக் கல்லூரி மாணவன்], இரவிக்குமார் [மகாஜனக் கல்லூரி மாணவன்] ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு வ. தில்லைநடராசா [வேலைப் பரிசோதகர், கச்சேரி, வவுனியா] வின் அன்பு மாமனாரும், அருள்நிதி, நவநிதி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22-06-1990 அன்று கொல்லங்கலட்டி இல்லத்தில் நடைபெற்றது. உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

தகவல்;
[13494] **திருமதி சரவணமுத்து**

## மக்கள் வங்கி.,.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வங்கிக் கிளையில் ஏற்படுத்தப்பட்டுள்ள கருமபீடங்களில் கொடுக்கல்வாங்கல்களை செய்துகொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளையில் கணக்கு வைத்துள்ள வாடிக்கையாளர்கள் அதேவங்கியில் கொடுக்கல் வாங்கல்களைச் செய்துகொள்ளலாம் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [அ-10]

## மன்னார்- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
குழாய்களைச் சேதமாக்கி அதில் இருந்து தமக்குத் தேவையான குடிதண்ணீரை இராணுவத்தினர் பெறுகிறார்களாம்.

இதனால் மன்னார், எருக்கலம்பிட்டி பகுதிகளை சேர்ந்த மக்கள் குடிக்கத் தண்ணீரின்றி பெரும் கஷ்டத்தை அனுபவிக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## பால்மா- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
5 வயதுக்குட்பட்ட 20 ஆயிரம் சிறுவர்களும், ஒரு வயதுக்குட்பட்ட 5 ஆயிரம் குழந்தைகளும்-

முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 வயதுக்குட்பட்ட 20 ஆயிரம் சிறுவர்களும், ஒரு வயதுக்குட்பட்ட 5 ஆயிரம் குழந்தைகளும்-

பால்மா உணவின்றி பெரும் கஷ்டத்தை அனுபவித்து வருகின்றனர். அவர்களின் உயிர்களைக்காக்க உடன் பால்மா வகைகளை அனுப்பவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

இதனிடையில் அகதிகளாக வந்துள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்க [illegible] போஷா' மா அனுப்ப[illegible] கோரப்பட்டுள்ளது. (ஒ-3)

## பலாலி---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
சிப்பாய்களை பின் நோக்கி நகரச் செய்தனர்.

இச் சம்பவங்களை அடுத்து பலாலி, காங்கேசன்துறை முகாம்களில் இருந்து ஏராளமான ஷெல்கள் ஏவப்பட்டன. (ஒ-68)

## அரச...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
முற்றனர்.

ஆசிரியர்களுக்கு முழுச் சம்பளமும் வழங்க மட்டும் மூன்று கோடி ரூபா தேவையெனவும், உடன் அனுப்புமாறும் கொழும்பு கல்வி அமைச்சை வட மாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் கேட்டுள்ளார்.

இதனிடையில் வட-பிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க 31 லட்சம் ரூபா தந்துதவுமாறு போக்குவரத்துச் சபை அதிகாரி கொழும்பு அதிகாரிகளிடம் கேட்டுள்ளார்.

இதே போன்று மற்றும் பல திணைக்களங்களும் கோரிக்கை விடுத்துள்ளன. (ஒ-3)

## நினைவுக்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தோட்டம் ஆகிய பகுதிகளையுப் சீண்டி வீழ்ந்து வெடித்தன.

எனினும் நினைவுக் கூட்டம் சிறிது தாமதித்து ஆரம்பமாகி நடைபெற்று முடிந்தது.

இதுவரையும் பொலிகண்டி, கம்பர்மலை போன்ற கரையோரப் பகுதிகளில் மட்டுமே கடலிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் வந்து விழுவதுண்டு [illegible] (அ-9)

## திருமலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ணுவத்தினரின் அனுமதியுடன் செல்ல முடியும்.

அதே நேரம் வெளியில் இருந்து நடுத்தர வயதுடைய தமிழர்கள் நகருக்குள் செல்ல அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால் அவர்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. [அ-3]

## நெடுந்தீவு ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
புகார் தெரிவித்துள்ளார்.

இதேவேளை—

கடந்த வாரத்தில் ஊர்காவற்றுறைப் பகுதியில் சேகரிக்கப்பட்ட 35 அரிசி மூடைகள் நெடுந்தீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விநியோகிக்கப்பட்[illegible] ஒரு குடும்பத்துக்கு ஒரு வேளைக்கும் அது போதுமானதாக இருக்கவில்லை, என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-51)

# மரண அறிவித்தல்

## கனகசபை இரத்தினசபாபதி

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த கனகசபை இரத்தினசபாபதி அவர்கள் 05-07-1990 இல் காலமானார்.

இவர் கமலாஜெனியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நடராசா, நாகேந்திரா, காலஞ்சென்ற வாமதேவா ஆகியோரின் அன்புத் தமையனாரும், நடேசன் [Lanka - Canneries], சாந்தி, ஸ்ரீகாந்தி, ஜயந்தி, கணேசன் [Lake House] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சிவசோதி, வரேந்திரன் [Ariaratnam Varendran and Co ], இராஜதுரை [National Housing Development Authority], பரமநாதன் [Cigma], லதா ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி இராசசூரியரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12-00 மணியளவில் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
**குடும்பத்தினர்**

114/2, கோவில் வீதி,
நல்லூர். (13496)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 06-07-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org